stered No. M. 2330 "SIDDHANTHAM"
Vol. 38—No. 8

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

ர் 38 | விசுவாவசு ஆவணி 1965 ஆகஸ்ட் | இதழ் 8

உள்ளுறை — பக்கம்

பத்திராசிரியர்: மு. அருணாசலம், எம். ஏ.,
உதவிப் பத்திராசிரியர்: வித்துவான் அம்பை. இரா. சங்கரன்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

ஆண்டுச் சந்தா ரூபா. 3 தனிப்பிரதி அணா 4

சமாஜச் செய்திகள்

29—8—65 ஞாயிற்றுக்கிழமை காலை 9–30 மணிக்கு சமாஜச் செயற்குழுக் கூட்டம் அலுவலகத்தில் நிகழும். செயற்குழு உறுப்பினர்கள் யாவரும் வருமாறு கேட்டுக் கொள்ளப்பெறுகிறார்கள்.

நமது சமாஜ மணிவிழா டிசம்பர் மாதத்தில் சிதம்பரத்தில் நிகழும் என்பதை சமாஜ உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம். தலைவர்கள், காலம் முதலியன பின்னர் அறிவிக்கப்பெறும்.

8—8—65 ஞாயிறன்று மாலை 6–மணிக்கு திருமயிலை கபாலீச்சுவரர் கோயில் தேவார பாடசாலைக் கட்டிடத்தில் நம் சமாஜச் சார்பில் சுந்தரர் திருநாள் நிகழ்ந்தது. திரு. கி. இராமலிங்கனார் எம். ஏ. அவர்கள் தலைமையில் திரு. பூ. ஆலால சுந்தரஞ் செட்டியார் எம். ஏ. அவர்கள் "சுந்தரர் செந்தமிழ்' என்பது பற்றி விரிவுரையாற்றினார்கள். தொடர்ந்து வித்துவான் அருள்திரு சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வாழ்த்துரை கூற, புலவர் ந.ரா. முருகவேள் M. A., M. O. L. அவர்கள் நன்றியுரையுடன் கூட்டம் இனிது முடிந்தது.

ஆவணி மாத விசேட தினங்கள்

8	(24-8-65)	செருத்துணை நாயனார் விழா
9	(25-8-65)	அதிபத்த நாயனார் விழா
,,		புகழ்த்துணை நாயனார் விழா
10	(26-8-65)	இளையான் குடிமாற நாயனார் விழா
12	(28-8-65)	மறைஞான சம்பந்தர் விழா
14	(30-8-65)	விநாயகர் சதுர்த்தி விழா
17	(2-9-65)	துலச்சிறை நாயனார் விழா
19	(4-9-65)	குங்கிலியக்கலய நாயனார் விழா

பிற செய்திகள்

புரசைத் திருநெறிக் கழகத்தின் சார்பில் நம்பியாரூரர் திருநாள் 4—8—'65 மாலை புரசை வேம்படி விநாயகர் கோவிலில் சிறப்புற நிகழ்ந்தது.

Reg. M. 2330

உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுள் நாடு.

மலர் 38 | விசுவாவசு ஆவணி 1965 ஆகஸ்டு | இதழ் 8

தில்லைச் சிவப்பிரகாசர்

(ஆசிரியர்)

தமிழ் நாட்டில் சைவ சமயத்தில் ஒரே பெயருடைய ஆசாரியர்களும் ஞானிகளும் நூலாசிரியர்களும் உரையாசிரியர்களும் பலர் இருந்து வந்திருக்கிறார்கள். இக்கூற்றுக்கு உதாரணமாக, தத்துவப் பிரகாசர், ஞானப் பிரகாசர், சிவப் பிரகாசர் என்ற பெயர்களைச் சொல்லலாம். உமாபதி சிவாசாரியார் சிவப்பிரகாசம் செய்த பிறகு, அடியார் பலர் சிவப் பிரகாசர் என்ற பெயரை வைத்துக் கொண்டார்கள். அவர்களுள், சிவப்பிரகாசர் என்றும் தில்லைச் சிற்றம்பலவர் என்றும் வழங்குகின்ற தில்லைச் சிவப்பிரகாசர் ஒருவர். இப்பெரியார் பிறந்த இடம் திருவாவடுதுறை என்று சொல்வதுண்டு; இது முப்பந்தொட்டி என்றும் கருத இடமிருக்கிறது. ஆனால் இவர் நெடுங்காலம் தில்லையில் வாழ்ந்திருந்து நடராஜப் பெருமானுடைய நடன கோலத்திலே மனத்தை ஈடுபடுத்தி வாழ்ந்திருந்தமையால், இவர் தில்லைச் சிற்றம்பலவர், என்றே வழங்கப் பெற்றார். இப்பெரியார் திருவுந்தியார் திருக்களிற்றுப்படியார் என்ற இரண்டு சைவ சித்தாந்த சாத்திரங்களுக்கும் உரை எழுதியிருக்கிறார். இது இவர்

எழுதிய களிற்றுப்படி உரையின் சிறப்புப் பாயிரத்தால் தெரிய வருகின்றது.

சேடன் படிபுரக்கும் தென்கடவூர் உய்யவந்தான்
பாடுங் களிற்றுப் படிதனக்கு—நீடிமையோர்
தேடுபுகழ்ச் செஞ்சொற் சிவப்பிரகா சன்திருந்த
நாடியுரை நாடா நயந்து.

உந்திகளிறு இரண்டின் உரை எட்டிலும் தில்லைச் சிற்றம்பலவர் என்ற சிவப்பிரகாசர் செய்தது என்ற குறிப்பே காணப்படுகிறது. இவ்வுரைகளின் காலம் 17-ஆம் நூற்றுண்டின் பிற்பகுதி என்று சொல்வர்.

உந்தி களிறு இரண்டும் சிறந்த அனுபவ நூல்கள். பாடல்களிலுள்ள அனுபவப் பொருளை இவர் தம் உரையில் தெளிவுபடுத்தி எழுதாவிட்டால் மூலத்தின் கருத்தை உணர்வது எளிதன்று. அனுபவ நூலாகிய இவற்றுக்கு இவர் அனுபவ ஆகாரத்தோடேயே உரை எழுதுகின்றூர்.

சிவப்பிரகாசத்துக்கு முன்னமே எளிதான பொழிப்புரை ஒன்று எழுதப் பெற்றிருந்தது. அது முதன் முதலாக சமாஜ சாத்திர வெளியீட்டின் இரண்டாம் பதிப்பில் வெளியிடப்பட்டது. ஓரளவு அந்த உரை பின் வந்த சிவப்பிரகாசருக்கு வழிகாட்டியாய் இருந்திருக்கிறது. இருப்பினும் சிவப்பிரகாச உரையே சாத்திரம் பயில்வோரிடையே அதிகம் பழகி வருகிறது.

இவ்வுரையாசிரியரைக்குறித்து வரலாறு எதுவும் அறிய முடியவில்லை. எனினும், மற்ெறாரு சிறுநூல் இவருடைய வரலாற்றைச் சிறிது தெரிவிக்கின்றது. 1934-ஆம் ஆண்டில் வையாபுரிப்பிள்ளையவர்கள் முப்பந் தொட்டி உலா என்ற ஒரு சிறு பிரபந்தத்தைச் சித்தாந்தம் இதழில் வெளியிட்

டார்கள். அந்நூலில் வரும் கண்ணிஒன்று அதன் ஆசிரியர் தில்லைச் சிவப்பிரகாசர் என்று தெரிவிக்கிறது.

> தில்லையினின் மேவுஞ் சிவப்பிரகா சன்னிசைத்துச்
> சொல்லுந் தமிழ்மாலை சூடினேன்.

என்பது உலாவின் 148-ஆம் கண்ணி.

முப்பந்தொட்டி என்பது, தொண்டை நாட்டில் ஆர்க்காடு என வழங்கும் நகரின் ஒரு பகுதியாகப் பாலாற்றின் கரையில் உள்ள ஒரு சிவ தலம். இங்கு சுவாமி திருநாமம் சோமநாதர். சந்திரன் (சோமன்) பூசித்தமையால் இப்பெயர்; அம்பிகை சௌந்தர பாலாம்பிகை. இப்பெயர்கள் உலாவால் தெளிவாகின்றன. இங்கு வசிட்ட முனிவர் இராமபிரானுக்குத் தத்—துவம்—அசி மகா வாக்கியப் பொருளை உபதேசித்தமையால், ஊர் முப் பதப் புரம் என்று பெயர் பெற்றது.

இவ்வுலாவானது ஒரு காப்பு வெண்பாவோடு, 427 கண்ணிகள் உடையது; பிரபந்தத்துக்குரிய அமைப்புக்கள் யாவும் சிறப்பாக அமையப் பெற்றது. நல்ல நடையுடையது. சிந்து தேச மன்னன் தன் மந்திரி யூகியுடனே சிவ தலங்கள் பலவற்றைத் தரிசித்து வந்தபோது இங்குவந்து இங்கிருந்த சிவானந்த முனிவர் உபதேசம் பெற்று இறைவனைத் தரிசித்து நகரம் நிருமாணித்து இருந்தான் என்பது வரலாறு. இந்த வரலாற்றோடு உலா தொடங்குகிறது. மூர்த்தியின் பெருமை என்ற பகுதியில் 70 கண்ணிகளால் திருத்தொண்டத் தொகையில் கூறப்பட்ட நாயன்மாருக்குச் செய்த அருளைப் பாடுகிறார். பின்னர் மனுநீதிச் சோழன், புலிக்கால் முனி ஆகியோர் வரலாறு, சில திருவிளையாடற் செய்திகள், தக்கன், மன்மதன், மார்க்கண்டன் வரலாறுகள், ஆலகாலமுண்டது, மாயனுக்கு ஆழி வழங்கியது, முப்புரம் எரித்தது. தாருகாவன மடவார் வரலாறு முதலியவை சொல்லப்பட்டுள்ளன. பின்னர் தசாங்கம், உலாச் சிறப்பு

ஆகிய பகுதிகள்; இங்கு உபநிடதமே அரன் வடிவம் என்று சொல்லுகின்றார். அடுத்து குழாங்களைச் சொன்ன பின்னர், ஏழு பருவப் பெண்களின் நிலையையும் பண்டை இலக்கிய மரபையொட்டி அழகாகவும், விரிவாகவும் கூறுகின்றார். "செத்துப் பிறக்கின்ற தெய்வங்கள்" என்ற தொடர், "செத்துப் பிறக்கின்ற தெய்வங்கள் மணவாள, செங்கீரை யாடியருளே" என்ற குமரகுருபர சுவாமிகள் வாக்கை நினைவூட்டுகிறது.

இவ்வுலாவைச் சிவப்பிரகாசர் தாம் பாடியமை குறிப்பிட்டுள்ளபடியால், அவர் இத்தலத்தில் இளமையில் வாழ்ந்தார் என்றும், முதுமையில் பக்குவமடைந்து உபதேசம் பெற்றார் என்றும் தில்லைநகர் சென்று அங்கு நடராஜ தரிசனம் செய்துகொண்டு வாழ்ந்திருந்தார் என்றும் நாம் யூகிக்கலாம். இவ்வாறு தில்லையில் இருந்த காலத்தில் திருக்களிற்றுப்படி முதலிய தரிசன விசேடத்தால் இவர் சித்தாந்த சாத்திர உரை எழுத நேர்ந்தது. அவ்வுரையுள் இவருடைய முதிர்ந்த ஞான பக்குவம் காணப்படுகிறது.

இங்ஙனமாக, தில்லைச் சிவப்பிரகாசர் என்பவர் இளமையில் முப்பந்தொட்டி என்ற சிவ தலத்தில் தங்கி அங்கு சோமநாதப் பெருமான்மீது சுவை நிரம்பிய உலாப் பிரபந்தம் பாடினார் என்றும், முதுமைப் பருவத்தில் சிதம்பரம் நடராஜ தரிசனம் செய்து, உந்திகளிறு இரண்டுக்கும் உரை எழுதினார் என்றும் அறிகிறோம்.

மண்டங்குடி

திரிபுவன நாயகர் கோயில்

(மு. அருணசலம்)

தொண்டரடிப் பொடியாழ்வார் பிறந்த ஊர் மண்டங்குடி. ஆழ்வார் அரங்கநாதனையே பாடியவர்; வேறு எந்தத் தலத்துப் பெருமாளையும் பாடவில்லை. அது பற்றியே இவ்வூரில் அரங்கநாதர் ஆலயம் அமைக்கப்பெற்றுள்ளது. சமீப காலத்தில் அறநிலையத் துறை ஆணையர் முயற்சியால் இக்கோயிலானது முப்பதாயிரம் ரூபாய்க்கு மேற்பட்ட பொருட் செலவில் புதிதாகத் திருப்பணி செய்யப்பெற்றது. மண்டங்குடி என்ற ஊர் திருவையாறு-சுவாமிமலை பஸ் சாலையில், கபிஸ்தலத்துக்குக் கிழக்கே ஒரு மைல் தூரத்தில் அண்டங்குடியிலிருந்து வடக்கு நோக்கிக் கற்சாலையில் ஒரு மைல் தூரத்தில் உள்ளது; (பாபநாசம் தாலுகா—தஞ்சை ஜில்லா)

இவ்வூரில் மிகச் சிறிய சிவாலயம் ஒன்றிருப்பது பலருக்கும் தெரியாது. இது திரிபுவன நாயகர் ஆலயம் என்ற பெயருடையது. அம்பிகை திரிபுவன நாயகி; பெருமாள் கோயிலுக்குப் போகும் வழியில், அதற்குக் கிழக்கே நூறு கெஜ தூரத்தில் உள்ளது. சுற்றிலும் குடியிருப்பு உண்டு. கோயில் மிகப் பழமையான கற்கோயில். ஆனால் முழுமையும் இடிந்துவிட்டது. பிரகாரங்கள், மதில்கள், வாயில், மண்டபங்கள் யாவும் இடிந்துவிட்டன. மூலவர், அம்பிகை ஆகிய இரு கருப்பக்கிரகங்கள்மட்டும் தூளாகவில்லை; ஆனால் இடிந்து கொண்டு வருகின்றன. மூலக் கோயிலின் வாயில் உடைந்து, ஊரார் மூங்கில் தூண் முட்டுக் கொடுத்திருக்கிறார்கள். கூரை எந்த நேரமும் உடைந்து விழக்கூடிய நிலையில் உள்ளது.

கருவறையானது கருங்கல்லால் கட்டப்பட்டது. இதன் பீடங்கள் பதுமவரி, பட்டியல்வரி, சுவர், தூண், கல்

போதிகை போன்ற எல்லாப் பாகங்களும் மிகவும் திருத்த மான சிற்ப வேலை செய்யப்பட்டுள்ளன. வடபுறத்து அ வரியில் இராஜராஜ சோழனுடைய 22-ஆம் ஆட்சி ஆண்டு கல்வெட்டு காணப்படுகிறது; வேறு கல்வெட்டும் உள்ள மிகப் பெரிய கோயிலாகிய தஞ்சைப் பெருங் கோயிலை கட்டிய சோழ மன்னன் இத்தகைய மிகச்சிறு கோயிலையு எல்லாச் சிற்பச் சிறப்பும் பொருந்தும்படி சிரத்தை காட்டி கட்டியிருப்பது பெரு வியப்பைத் தருகிறது.

மகாலிங்கம், பெரிய வடிவில் அழகாக அமைந்திருக் கிறார். தேவியார், சிறுவடிவினர். பரிவாரக் கோயில்கள் இடிந்து போயினமையால் விநாயகர், முருகன், சண்டீசர், பைரவர், சூரியன், தக்ஷிணாமூர்த்தி போன்ற திருவுருவங்கள் சுவாமி கோயில் முன் புறத்தில் வரிசையாக நிறுத்தி வைக் கப் பெற்றுள்ளன. வெயில், காற்று, மழையில் நிறுத்தப் பட்டிருப்பதால் நாளுக்கு நாள் இவ்வுருவங்கள் சீர்கேடடை கின்றன.

சுவாமி கோயிலைச் சூழ்ந்துள்ள கற்சுவரானது மழை நீர் இறங்கியும், மரஞ்செடிகள் வேர்விட்டும் வெடிப்புக்கண்டு பல இடங்களில் கற்கள்விலகி எந்த நிமிடமும் கீழேவிழுந்து விடக்கூடிய நிலையில் உள்ளது விழுமானால் சிற்ப வேலைப் பாடமைந்த கற்கள் எல்லாம் நொறுங்கிவிடும்.

இச்சிறு கோயில் சோழநாட்டுச் சிற்பச் செல்வங்களில் ஒன்று என்பதில் சந்தேகமில்லை. இச்செல்வம் அழியாமல் காப்பது தமிழ் மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் உரிய பெருங் கடமை. கோயிலுக்குச் சொத்து எதுவுமில்லை. ஊர் மக்கள் முயற்சியால் அரியலூரிலிருந்து குருக்கள் வந்து ஒரு கால பூஜை மட்டும் செய்து வருகிறார். ஆனால் இக் கோயிலைப் புதுப்பிக்கும் வேலை ஊர்மக்களால் நடைபெறாது. அரசாங்கம் முயன்றால்தான் நடைபெறும். இரண்டு வகை யில் இக்கோயிற் கலைச் செல்வம் அழியாமல் காக்க முடியும்; அந்த இடத்திலேயே பிரித்துக் கட்டுவது ஒன்று; கருங்கல் உறுப்புக்களுக்கு எண்ணிட்டுப் பிரித்து அடுக்கி விட்டுக்

கோயில் முழுமையும் பிரித்து மீண்டும் எண் வரிசைப்படி கற்களை அடுக்கிக் கோயில் அமைப்பது, மற்றொன்று; இது எளிதில் செய்யத்தகுந்தது. சில ஆயிர ரூபாய்கள் செலவில் இதை முடிக்கலாம். அல்லது கற்களையே பிரித்து எடுத்துச் சென்னை மியூசியம் போன்ற இடத்தில் கொண்டு போய்ப் புதிதாகக் கட்டலாம். அங்கு இது தனிக்கோயிலாக அமைந்து சென்னையை வந்து பார்க்கும் பிறநாட்டவர்க்குச் சோழர் காலச் சிற்பத் திறன் எவ்வாறு இருக்கும் என்று அறிவதற்கு ஒரு நல்ல எடுத்துக் காட்டாய் இருந்துவரும். சிறு கோயிலாகையால் இவ்வாறு செய்வது சாத்தியம்.

மண்டங்குடி அரங்கநாதர் கோயிலுக்கு ஐயாயிரம் ரூபாய்க் கணக்கில் நன்கொடை அளித்த பல தேவஸ்தானங்கள் ஓர் ஐயாயிரம் ரூபாய் அளித்தால் இக்கோயிலைப் புதுப்பித்துக் கட்டிவிடலாம். இத்தகைய புராதனக்கட்டிடக் கலைச் செல்வம் அழியாது பாதுகாப்பது தமிழ் மக்களுக்கும், அரசாங்கத்துக்கும், உரிய பெருங் கடமையாகும். காலந்தாழ்த்தாமல் இவர்கள் இக்காரியத்தைச் செய்வார்களாக.

உ

சீட்டும் கவியும்

ந. வீ. செயராமன், எம். ஏ, விரிவுரையாளர்,

தமிழ் ஆராய்ச்சித் துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

நீறணி அம்பலவன்பால் நெஞ்சத்தை ஒருப்படுத்தும் தோத்திர நூல்கள் பலவற்றுள், பதினோராந் திருமுறையாக வகுக்கப்பட்டுள்ள பாசுரத் தொகுதியும் ஒன்று. பன்னிரண்டு அருளாளர்கள் பாடிய இத் தொகுதியில் ஆயிரத்து முந்நூற்று எண்பத்தெட்டுப் பாடல்களைக் கொண்ட நாற்

பத்தொரு நூல்கள் அமைந்திலங்குகின்றன. இத்தொகுதி, யின் முதற்பாடலாக அமைந்தது 'திருமுகப் பாசுரம்' என வழங்கும் இறைவன் அருளிய சீட்டுக் கவி இலக்கிய மாகும்.

சீட்டுக் கவி என்பது தற்காலத்தில் வகுக்கப் பெற்ற தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களில் சேர்க்கப் படாதது. சீட்டிலே எழுதப்பட்ட கவிதைக் கடிதம் சீட்டுக் கவி ஆகும். சீட்டுக் கவி என்ற புதிய சிற்றிலக்கிய வகை யைத் தோற்றுவித்த பெருமை ஆலவாய் இறைவனுக்கும், சீட்டுக்கவி இலக்கியத்தில் முதலாவதாக விளங்கும்பெருமை பதினோராந் திருமுறையில் உள்ள திருமுகப் பாசுரத்திற்கும் உரியனவாகும்.

[திருமுகம் எனவழங்கும் இச்சீட்டுக்கவி என்பதற்குத் தீட்டுக்கவி என்றும் ஓலைத் தூக்கு என்றும் வேறு பெயர் களும் வழங்குகின்றன. தீட்டுகின்ற கவிதை ஆதலால் தீட் டுக்கவி என்ற பெயர் வழங்குகின்றது.]

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனு [மென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணால் காயுளங் கொண்டு [தொண்டர்
தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால் அமுதந் தெளிக்கும் [வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப் பேடே சகலக லாவல்லியே.

எனவரும் சகலகலாவல்லி மாலையில் தீட்டும் கலைத்தமிழ் என்ற பெயரால் பொதுவாக இலக்கியங்களைக் குறிப்பிட்டுள் ளதைக் காண்கின்றோம். அம்முறையிலே தீட்டப்படும் கவிதைக் கடிதத்தை தீட்டுக் கவி என்ற பெயரால் வழங்கி னர். அந்தகக்கவி வீரராகவர் பிற்காலத்தில் சீட்டுக் கவி பாடும் நியமமாக விளங்கியவர். செழியனதரையனுக்கும் காளத்தி கிருட்டினப்பவாணனுக்கும், சந்திரவாணனுக்கும், திம்மைய வப்பையனுக்கும் அவர் பாடிய சீட்டுக் கவிகள்

பொன்னெழுத்தில் தீட்டும் கலைத் தமிழ்க் கவிதைகளாக விளங்குவன. வீரராகவரின் சீட்டுக் கவியின் சுவையறிந்த திருவொற்றியூர் கோளகி மடத்தைச் சார்ந்த நிரஞ்சன நாதர் என்பார்;

திட்டுக் கவியென்று சொல்வார் சிலரந்தத் திட்டுக்கவி
காட்டுக்கெறித்த நிலவாகிப் போஞ்செங் கனகரத்னச்
சூட்டுக் கிரீட முடிவேந்த ருட்பத்தி சூறைகொள்ளும்
நாட்டுக் கிலக்கியங் கவிவீர ராகவ னற்கவியே

என்று பாராட்டியுள்ளார். நிரஞ்சனநாதரின் பாடலில் சீட்டுக் கவியைத் திட்டுக்கவி என்று குறிப்பிட்டுள்ளதைக் காணலாம்.

இனி, சீட்டுக் கவியை ஓலைத்தூக்கு என்ற பெயராலும் குறிப்பிடுவர். பழங்காலத்தில் ஓலைத் துண்டில்தான் எழுதுவது வழக்கம். ஓலைத் துண்டில் எழுதப்பட்ட தூக்கு ஆதலால் ஓலைத்தூக்கு என்று கூறுவர். தூக்கு என்றால் கவிதை.

"மன்னுடை மன்றத்து ஓலைத் தூக்கினும்"

எனவரும் நன்னூல் சூத்திரத்தில் ஓலைத்தூக்கு என்ற பெயரால் சீட்டுக் கவியைப் பற்றிய குறிப்பு உள்ளதைக் காண்கின்றோம்.

சீட்டுக்கவியை இன்ன யாப்பில் எழுத வேண்டும் என்றோ, இன்ன அமைப்பில் எழுத வேண்டும் என்றோ பிற சிற்றிலக்கியங்களுக்குப் பாட்டியல் நூல்களில் விதிகள் கூறப்படுதல் போன்று, எந்த நூலிலும் விதிவகுக்கப்படவில்லை. ஆயினும் திருமுகப் பாசுரம் முதலாக உள்ள பல்வேறு சீட்டுக் கவி இலக்கியங்களையும் காணும்போது, சீட்டுக்கவி இலக்கியத்தின் அமைப்பை நாம் ஒருவாறு அறிய முடிகின்றது.

சீட்டுக்கவி இலக்கியத்தில் பொதுவாக மூன்று வகைப் பிரிவுகள் உள்ளன. முதற்பகுதியில் சீட்டுக் கவி யாரால்

எழுதப்படுகின்றதோ அவர் பெயரும் பெருமையும் உரைக்கப்படும். இரண்டாம் பகுதியில், சீட்டுக்கவி யாருக்கு எழுதப்படுகின்றதோ அவர் பெயரும் பெருமையும் கூறப்படும். மூன்றும்பகுதியில் சீட்டுக்கவி எதற்காக விடுக்கப்பட்டதோ அது பற்றிய பொருள் விளக்கப்படும். இம்மூவகைப் பகுதிகளையும் பொதுவாக எல்லாச் சீட்டுக்கவி இலக்கியங்களிலும் நாம் காண்கின்றோம்.

சீட்டுக்கவி இலக்கியங்களின் முற்பகுதியில் சீட்டுக்கவி யாரால் எழுதப்படுகின்றதோ அவர் பெயரும் பெருமையும் உரைக்கும் பகுதி தமிழ் இலக்கியத்தில் காணவியலாத ஒரு புதுமையாகும். கவிதையை எழுதுகின்ற கவிஞன் தன்னுடைய பெருமையையும் புகழையும் தானே கூறுவது சீட்டுக்கவி இலக்கியத்திற்கு மட்டுமே உரிய சிறப்பாகும். எனவேதான்,

மன்னுடை மன்றத்து ஓலைத் தூக்கினும்
தன்னுடை யாற்றல் உணரா ரிடையினும்
மன்னிய அவையிடை வெல்லுறு பொழுதினும்
தன்னை மறுதலைப் பழித்த காலையும்
தன்னைப் புகழ்தலும் தகும்புல வோற்கே.

என்று நன்னூலார் பாடுகின்றார். புலவர் தன்னைத் தானே புகழ்ந்துகொள்ளும் இடங்கள் இன்னின்னவை என்று வரிசைப்படுத்தி உரைக்க வந்த விடத்து, ஓலைத்தூக்கினும் தன்னைப் புகழ்தல் தகும் என்று அவர் கூறுகின்றார். எனவே சீட்டுக் கவியில், அதனை எழுதும் புலவர்கள் தங்களைப் புகழ்ந்து கொள்ளுதல் இலக்கண மரபுக்குட்பட்டதேயாகும் என்பது குறிப்பிடத் தக்கது.

செந்தமிழ் இலக்கியத் தொகுதியில், இறைவனால் எழுதப்பட்ட இலக்கியங்களுள், சீட்டுக்கவி இலக்கியமாக அமைந்த பாடல்கள் இரண்டு உள்ளன. பதினோராந் திருமுறையின் மணிமுடியாக அமைந்த திருமுகப்பாசுரம் அவற்றுள் ஒன்று.

மதிமலி புரிசை மாடக் கூடற்
பதிமிசை நிலவு பால்நிற வரிச்சிறகு
அன்னம் பயில்பொழில் ஆல வாயில்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியென பாவலர்க்கு
உரிமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா உகைக்குஞ் சேரலன் காண்க.
பண்பா லியாழ்பயில் பாண பத்திரன்
தன்போல் என்பால் அன்பன் தன்பால்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே.

என்பது திருமுகப் பாசுரம். இப்பாடலின் முதல் நான்கு வரிகள், இச்சீட்டுக் கவியை எழுதியவர் இறைவன் என்பதையும், இறைவனின் இருப்பிடமான ஆலவாயின் அழகையும் பரக்கப் பேசுகின்றன. அடுத்துள்ள நான்கு வரிகள், இச் சீட்டுக் கவியைக் காண வேண்டியவர் சேரர் என்பதையும், சேரனின் சீர்சால் பெருமை இன்னது என்பதையும் கூறுகின்றன. இறுதியில் உள்ள நான்கு வரிகள், சீட்டுக் கவி என்ன காரணத்திற்காக விடுக்கப்பட்டது என்பதைவிளக்குகின்றன.

ஏழிசையாய் இசைப் பயனாய் விளங்கும் இறைவனை இசையால் வழிபட்டு, இறைவனின் அன்புக்கு உரியவராக ஆனவர் பாணபத்திரர். பாணபத்திரர் பொருளின்றித் துயருறுவதை அறிந்த இறைவர், அவருக்குப் பொருள் தந்து அருள எண்ணினர். பொன்னும் மெய்ப்பொருளும் தருகின்ற இறைவர், கண்முத்தரும்பக் கழற் சேவடியைக் கை தொழும் அடியார்க்கு உண்முத்தரும்ப உவகைதரும் இறைவர், பாணருக்கு அருள்புரிய இச்சீட்டுக் கவியைஅருளினர். இக் சீட்டுக் கவியைப் பெற்ற, சீர்பாடும் அடியார் சேரனிடம் சென்று சீர்வரிசை பெற்றார் என்பது வரலாறு.

இறைவன் பாணபத்திரருக்குச் சீட்டுக்கவி தந்து அருளிய திறத்தைப் பெரிய புராணத்தில் கழறிற்றறிவார் புராணத்துள்ளும், பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புரா

ணத்தில் திருமுகங்கொடுத்த படலத்துள்ளும், பெரும்பற்றப் புலியூர் நம்பியின் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தில் திருமுகங்கொடுத்த திருவிளையாடலிலும் பரக்கக் காணலாம்.

அதிர்கழல் உதியர்வேந்தற் கருள்செய்த பெருமையாலே
எதிரில்செல் வத்துக்கேற்ற இருநிதி கொடுக்க என்று
மதிமலிபுரிசை என்னும் வாசகம் வரைந்த வாய்மைக்
கதிரொளி விரிந்த தோட்டுத் திருமுகங் கொடுத்தார்காண:

எனவரும் பெரிய புராணச் செய்யுளில் இறைவன் பாணபத்திரருக்குத் திருமுகம் வழங்கிய அருள்காட்சி அழகுறவிளக்கப்பட்டுள்ளது. சீட்டுக் கவியைக் கண்ட சேரர் கோமான் பரந்த நிதியின் பரப்பையும் உரந்தங்கிய வெங்கரி பரிகள் முதலாம் உயிருள்ளனவும் தந்து 'அரசும் கொள்ளும்' எனப் பாணபத்திரரை அடி இறைஞ்சினர்.

தென்னவன் சேரன்மாட்டுக் கொடுக்க, இறைவன் தந்த திருமுகம் பெற்ற பாணனின் மகிழ்ச்சிப் பெருக்கை,

மறைக்குரை செய்த வாக்கான் மதிமலிபுரிசை என்னும்
சிறப்பியல் சீர்சால் செய்யுட் பாசுரஞ் செப்பித் திட்டிப்
பிறைச்சடை பெருமா னல்கி மறைந்தனன் பெரும்பாண் [செல்வன்
உறக்கந்தித் தாடிப்பாடி யுவகைமா கடலி லாழ்ந்தான்

எனவரும் பாடலில் பரஞ்சோதியார் பாங்குற விளக்கியுள்ளார்.

பாணபத்திரருக்குத் திருமுகந் தந்த காட்சியை

விதமுறு தனங்கண் மிக்க வேண்டுவ அளிப்பன் ருமா
ததர்வுற விரைவிற் சென்றுஇவ் ஓலையை அளித்தி என்று
மதிமலிபுரிசை என்றோர் வரைதரு திருமுகத்தை
முதிர்தரு கனவிற் காணக் கொடுத்தனன் முக்கட் சொக்கன்:

என்று பெரும்பற்றப் புலியூராரும் பாடுகின்றார்.

மேலும் திருவிளையாடற் பயகரமாலையில்

"வேடிக்கை யாக மதுரா புரிமன்னன் மேன்மையெலா
நாடிப் புகழு மியல்பாண பத்திர னல்லிசைக்காத்

தேடிக் கொடுக்கவும் போதாமற் சேரற்குச் சீட்டுக்கவி
பாடிக் கொடுத்த சொக்கே பரதேசி பயகரனே''

என்றும்,

''குடக்கோச் சேரன் கிடைத்திது காண்கென
மதிமலிபுரிசைத் திருமுகங் கூறி
யன்புருத் தரித்த வின்னிசைப் பாணன்
பெறநிதி கொடுக்கென வுறவிடுத்தருளிய
மாதவர் வழுத்தும் கூடற் கிறைவன்''

என்று கல்லாடத்துள்ளும், இறைவன் பாணபத்திருக்கு இன்னருள் வழங்கிய செய்தி விளக்கப்பட்டுள்ளது.

திருமுகப் பாசுரமாகிய இச் சீட்டுக்கவியே யன்றியும், நற்றமிழ் அறிஞர் கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியாருக்கு இறைவன் விடுத்ததாக மற்றொரு சீட்டுக் கவியையும் கூறுவர்.

அடியார்க் கெளியன்சிற் றம்பலவன் கொற்றங்
குடியார்க் கெழுதிய கைச்சீட்டுப்—படியின்மிசை
பெத்தான்சாம் பானுக்குப் பேதமறத் திக்கைசெய்து
முத்தி கொடுக்க முறை.

என்பது அச்சீட்டுக்கவி. உள்ளுளே உருகி நின்றங்குகப்பவர்க்கு அன்பராகிய இறைவன், பெற்றான் சாம்பான் என்னும் பக்தனுக்கு முக்தி கொடுக்குமாறு அருளிய சீட்டுக் கவி இது. அடியார்க்கெளியன், சிற்றம்பலவன் என்று தம்மை இப்பாடலில் இறைவன் அறிமுகப்படுத்திக் கொண்டுள்ளார். காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க, அன்பெனும் பாசம் வைத்து, அழுது தொழுது ஆடிப்பாடும் அடியவர்கட்கு இறைவன் எளியனாக விளங்கும் ஒப்பற்ற பண்பை இத்தொடரில் காண்கின்றோம். கொற்றங் குடியார்க்கெழுதிய கைச்சீட்டு என்னும்தொடரில், இச்சீட்டுக்கவி யாருக்கு எழுதப்பட்டது என்று கூறப்பட்டுள்ளது. பெற்றான் சாம்பானுக்கு தீக்கைசெய்து முக்தியளிக்க வேண்டும் என்ற செய்தி இறுதி அடிகளில் விளக்கப்பட்டுள்ளது.

இறைவனின் ஆணைப்படி, கொற்றங்குடி உமாபதி சிவாச்சாரியார் பெற்றான் சாம்பானுக்கு நிருவாண தீக்கை

செய்தாரென்றும், அதனல் பெற்ருன் சாம்பான் உடல் நீங்கி வீடுபேறு அடைந்தான் என்றும், இதனை அறியாது ஐயப்பட்ட மன்னனுக்கு, தன் பூசை நீரால் வளர்ந்த செடிக்கும் தன் ஆற்றலால் முத்தியளித்து அவன் ஐயந் தீர்த்தார் என்றும் வரலாறு கூறப்படுகின்றது.

இங்ஙனம் கி. பி. ஒன்பதாம் நூற்ருண்டில் இறைவனுல் தோற்றுவிக்கப்பட்ட இச் சீட்டுக் கவி இலக்கியம், கி. பி. பதினுன்காம் நூற்ருண்டில் காய்த்து, பிற்காலத்தில் கனிந்து விளங்கியது. துறைமங்கலம் சிவப்பிரகாசர், அந்தகக் கவி வீரராகவர், காளமேகப் புலவர், சரவணப் பெருமாள் கவி ராயர், கவிராச பிள்ளை ஆகியோரால் வளர்க்கப்பட்டுச் சீட்டுக்கவி இலக்கியம் பிற்காலத்தில் செழித்து வளர்ந்தது.

திருமந்திரம் அரியவுரை

(அம்பை. சங்கரனர்)

தஞ்சாவூர்த் தட்டான் தலத்துக்கு நாயகன்
மஞ்சாடி கொள்ளும் வழக்கன்றி மன்றேருன்
துஞ்சான் உறங்கான் தொழில் செய்யான் சோம்பிரான்
அஞ்சாறு நாளைக் கவதிதந் தானே.

(என்பது) தானினைந்த விடங்களிலே கூடவுடன்பட்டுப் போதலானுந்தனுக்கவையவமானவிருபத்து நாலு கரணங்களுக்கும் இருப்பிடமாகையாலுந் தனக்குச் சார்தல் தனக்குடைமையானவருடம்பென்று மிவ்வுடம்பின் மேலான நிலத்திலே ஒன்றிலுங் கூட்டாமற்சாட்சியாக விருப்பானுமாய் நீங்குகிற வாயுப் பன்னிரண்டங்குலத்திலே எட்டங்குலமாக்கிக் கொள்ளுவானுமாய்ச் சடங்கின்றுருக் காணப்படாதானுமாயிருந்துள்ள பரமசிவனிடத்தே குரு வசனத்தின்படி பஞ்சேந்திரியங்களையொடுக்கி விதுதானேகிட கழிந்த நாளையு மேலே செல்லும்படி தருவித்தவராயிருந்தனரென்று குரு வசனத்தின் பெருமையை வியந்து சொல்லியது.

தஞ்சா என்பது சாகிற தொழிலே தமக்குடைமை யுமாமென்றபடி. ஊர் என்பது இருபத்து நாலு பேருக்கு இருப்பிடமானபடியாலே ஊரெனத்தகுமென்றபடி. தட்டான் என்பது இந்த உடம்பிலுள்ளாரெல்லாந் தன் சன்னதியிலே சேட்டிக்க விட்டுத் தானதிற்கூடாமற் சாட்சியாக விருந்தவனென்றபடி. தலத்துக்கு நாயகன் என்பது நவமண்டலத்துக்குமப்பால் ஆன நிலத்திலேயிருந்துள்ள நாயகனென்றபடி. மஞ்சாடிகொள்ளும் என்பது இப்படி நீங்குகிற வாயுப் பன்னிரண்டங்குலத்திலே யெட்டங்குலத்தைத் தன்னிடத்திலேயாக்கிக் கொள்ளும் என்றபடி. மஞ்சாடி என்பது எட்டு மாவாதலில் எட்டங்குலமான வாயுவென்றபடி. வழக்கென்னில் என்பது மனுவேதாகம சாத்திர புராணங்களாலே வருசடங்கின்றுரு வெளிப்படானென்றபடி. துஞ்சான் உறங்கான் தொழில் செய்யான் சோம்பிரான் என்பது இறந்துபடுதலு மயக்கமும் வியாபரித்தலும் சோம்புதலுமில்லாதவனென்றபடி. அஞ்சாறு என்பது இப்படிக்கிருந்துள்ள பரம சிவனிடத்தே கூடி விஷயங்களிலே பாவம்பட்ட ஐம்புலனுடைய வியாபாரத்தையும் ஒடுக்கிலென்றபடி. நாளைக்கவதி தந்தானே என்பது இப்படி தேய்ந்தார்க்குக் கழிந்த நாளு மேலெழும்படி தருமேயென்றவாறு. நவமண்டலமாவது நவாதார மண்டலங்கள்; அனுவமண்டலம், சலமண்டலம், தேயுமண்டலம், வாயுமண்டலம், ஆகாச மண்டலம், சூரிய மண்டலம், சோமமண்டலம், தாரகா மண்டலம், அக்னி மண்டலம், நவ மண்டலங்களும். இவை சரீரத்தில் குரு முகத்தால் அறிக.

(குறிப்பு) இச்செய்யுளை சமாஜப் பதிப்பு முதலிய எப்பதிப்புகளிலும் காண இயலவில்லை.

தம் + சா = தஞ்சா என்ருயிற்று.

ஆண்டொன் றதாய வகார உகாரமாய்
மாண்ட மகார மிரவி மதியனல்
ஈண்டி விரேசக பூரக கும்பகந்
தோண்டி விழுங்கயி றற்றிடுந் தூக்கே.

(என்பது)”...நிமூலாதாரத்திலே நின்று தோன்றி சாமம், நாள், மாதம் இரண்டாக விரிக்கிற அகார உகார மகாரம்

உயிரெழுந்தான் சோம சூரியாக்கினிகளில் இடாபிங்கலை சுழிமுனையிலே வியாபரித்துப் பிராண......... .....முகுந்து புறம்பே விடுவிக்கிற முறைமை கெடும்படி குருவசனயாகின்ற சூத்திரப் படியிலே மேலேயாம்படி நாசியோடே வலித்துக்கொள்ளில் சரீரமொருக்காலும் அழியா......ன்று மேலாய வாயுவின் பெருமையை வியந்து சொல்லியது.

ஆண்டொன்றதாய் என்பது மூலத்திலேநின்று முதைதையாதி தோன்றி மூன்றே முக்காலாகப் பகுத்தோடிச் சாமம் நாள் மாதம் இரண்டென்னு முறைபாடு தோன்றும்படியாயவை விடுவிக்கிறவென்றபடி. அகார உகாரமாய் என்பது மாட்சிமையுடைத்தாய் மகாரமாயுமென்றபடி. பருதிமதியனல் என்பது ரேசிக்கப் பூரிக்கக்கும்பிக்கவென்கிற முறை யிடா பிங்கலை சுழிமுனை வழியாக நின்றென்றபடி. தோண்டி விழும் என்பது பிராணனைத் தோன்றிக் கொண்டு புறம்பே விழும் என்றபடி. கயிறற்றிடிலென்பது குருவசனமாகிற சூத்திரம் பிழைக்கில் என்றபடி. தூக்கேயென்பது ஆதலாலிது நாசிவழி புறம்பு போகாமல் மேலாயாம்படி தூக்கிக் கொள்ளென்றவாறு

என்னவே யிம்மூன்று வாயுவின் பெருமையும் வியந்து அதனை வளிமனநிறுவலென்னும் மந்திர யோகத்தால் நிறுத்த வல்ல திட சித்தரான யோகிகளுக்கும் மாயாதனு கரணமானவுடல் நிற்பதென்பதூஉங் கூறியது. இன்னதனினால் ஞான நிட்களத்தைக் கூட்டிச் சிவன் முத்தாவததினன் நிர்வந்தித சித்தவனுவனென்பதுங் கூறி யோக மார்க்கம் விளக்கிற்றென்றறிக என்றவாறு.

மேல் அன்மைப் பிராணனுகிறவமிர்த விந்து தாரமிதற்கு வேண்டுமென்பது கூறுகின்றதென்றறிக.

இது முப்பதியான் முகவுரைப் பயனென்க.

(குறிப்பு) தொண்டி என்பது தோண்டி என எதுகை நோக்கி நீட்டல் விகாரமாயிற்று. "இது முப்பதியான் முகவுரைப் பயனென்க" என்பதிலிருந்து இவ்வேட்டில் உரையெழுதிய பெரியார் இப்பாட்டுடன் முப்பது செய்யுள்களுக்கு உரை எழுதியிருக்கிறார் போலும். ஆனால் அவற்றுள் இருபத்தேழு பாக்களுக்கு உரை கிடைக்கவில்லை. இச்செய்யுளும் சமாஜப் பதிப்பு முதலாய பல பதிப்புகளில் காணக்கூடவில்லை.

உ

சிவமயம்

சைவ சித்தாந்தத் தெளிவு

முதலாவது சொற்பொழிவு

17—5—64

[காலஞ்சென்ற டாக்டர் நடேசபிள்ளை அவர்கள் தமது இறுதிக் காலத்தில் ஏறக்குறைய பத்து சைவ சித்தாந்தச் சொற்பொழிவுகள் இராமநாதன் கல்லூரியில் ஆற்றினார்கள். அவற்றைப் பல அறிஞர்கள் கேட்டு மகிழ்ந்தனர். அவற்றுள் மூன்று சொற்பொழிவின் சாரத்தை ஆசிரியர் திரு. செ. கதிரேசபிள்ளையவர்கள் எழுதி உதவியுள்ளார்கன். அவை பலருக்கும் பயன்படும்படி ''சித்தாந்தம்'' மூலம் வெளியிடுகின்றோம்.

—★—

சைவ சித்தாந்தம் பற்றிய கருத்துக்களில் தெளிவேற்படுவது மிக நன்மை தரும் எனச் சில அன்பர் கூறி என் கருத்துக்களைத் தாம் கேட்கப் பிரியப்படுவதாகவும் உரைத்தனர். எனது கொள்கையில் யான் உணர்ந்தவற்றை உரைக்கலாம் என யானும் ஒப்புதல் செய்தேன். அதன் விளைவுதான் இன்றைக்கு இங்கு நிகழும் உபந்நியாசம்.

சைவ சித்தாந்தம் மிகப் பரந்தது; பெரியது. சமய விசாரணை யாவருக்கும் இயல்பாக உண்டாவதோர் உணர்வு. சமயம் என்பது அவரவர் பெற்ற அநுபவமாகும். யாவர்க்கும் ஒவ்வோர் சமயம் உண்டு. வைணவம், பௌத்தம், கிறித்தவம் எனப் பல சமயங்களை நாம் காண்கிறோம். இவ்வேறுபாடுகள் அநுபவ நிலைபற்றி எழுந்தவையே. விசாரணை செய்யும் மனத்திலே தோற்றமாகும்

தெளிவு—உண்மையே சமயமாம். அவரவர் பக்குவம், அநுபவங்களுக்கேற்ப அத்தெளிவும் மாற்றம் பெறுகின்றது. காணுகின்ற உலகத்தைவிட, காணப்பெருத ஒன்று பற்றிய அடிப்படைக் கருத்தும் புந்தியில் எழுகின்றது. அப்பொழுது சமய நிலையின் மாற்றமும் உண்டாகின்றது.

உலகின் பெரும்பான்மை மக்கள் கொள்ளும் சமய நிலையை உலோகாயதம் எனக் கூறலாம். காணப்படும் உலகம் பிரத்தியட்சமாயுள்ளது. ஐம்புலனுல் நுகரப்படும் இன்பதுன்பங்கள் நிலையானவை. உலகம் சாசுவதமானது. அதனிலே மனம்பதிய, புலனுகர்ச்சிகளிற் கருத்துச்செல்ல அவற்றைநிலையானவையாகக்கொண்டு அப்பாற்செல்லும் அறிவின்றி நிற்கும் நிலையே உலோகாயதமாகும். இன்று உலகில் வாழ்கின்ற மக்களிற் பெருந்தொகையினரின் சமயம் இவ் வுலோகாயதம் எனக் கூறலாம்

இதன்மேல் ஓர் உணர்ச்சி தோன்றுகிறது. ஐம்புல நுகர்ச்சியின்மேல் அறிவுசென்று ஆராய்வுநடாத்துகிறது. அவ்வாராய்வினுற் சில உண்மைகள் தோன்றுகின்றன. இப்பொழுது ஐம்புல நுகர்ச்சியைத் தவிர்த்து வேருெரு நிலை ஏற்படுகிறது. இங்கு, சுக துக்கங்களுக்குரிய காரணங்கள் ஆராயப்படுகின்றன. இவ்வாராய்வினுற் புதிய நிலை தோன்றுகிறது. விஞ்ஞானம் உலகத்தை ஆராய்ந்து முடிவு காண்கிறது. பின் அம்முடிவுகொண்டு சிலவற்றை அநுமானிக்கிறது. அஃதேபோன்று உலோகாயத நிலையில் நின்று அநுமானித்து உணரப்படும் உணர்வுநிலை உண்டாகின்றது. அவ்வுணர்வு நிலை பௌத்தம் எனச் சொல்லப்படும். பௌத்தம் என இங்குப் பேசப்படுவது உலகிலே பௌத்த சமயிகள் எனக் குறிப்பிடப்படும் கூட்டத்தைக் குறிப்பதன்று. இது மனிதனின் சமய நிலைகளில் ஒன்று. நல்வினைகளே சுகத்துக்குக் காரணம் என்றும் தீவினைகள் துன்பத்துக்குக் காரணம் என்றும் உணருகின்ற இந்நிலை உலோகாயதத்தினும் உயர்வாகிய ஒரு நிலை. புத்தர் இது பற்றி ஆய்ந்துகூறிய காரணத்தால் இது பௌத்தம்எனப் பட்டது. மனநிலையிலும், நடத்தையிலும், ஒரு நியதி உண்டு; நியதியாவது சட்டம். அஃதாவது, தவருமல்

நடப்பது எனக் கூறலாம். இங்ஙனமாகிய நியதி ஒன்று சமயத்திலே ஏற்படுகின்றது. அது படிப்படியான வளர்ச்சி கொண்டுள்ளது. படிப்படியான இவ்வளர்ச்சி சோபான முறை எனப்படும். சைவ சமயம் அறுவகைச் சமயங்களை இச்சோபான முறையில் அமைத்துக்காட்டியுள்ளது. பௌத்த சமய நிலையிலுள்ள ஆன்மா மேற்காட்டிய சட்ட நியதியை யோசிக்கிறதெனக் கூறலாம். அஃதாவது, காரணகாரியங்களை ஆராய்கிறது எனக் கொள்ளலாம்.

சைவ சந்தானுசாரியராகிய அருணந்தி சிவாசாரியர் சுபக்கம், பரபக்கம் எனப் பகுத்துச் சமய நிலைகளை ஆராய்ந்து கூறியுள்ளார். இங்ஙனம் பரபக்கம் பற்றிக் கூறும் முறை தமிழ் நாட்டிலேதான் முதலிற் றோன்றியது. மணிமேகலைக் காவியத்திலே சமயக் கணக்கர் தம் திறம் கேட்ட காதை எனப்படும் பகுதி பௌத்த மதத்தைச் சுபகக்கமாகக்கொண்டு அந்நாட் பயின்ற மற்றை மதங்களைப் பரபக்கமாகக் கூறியுள்ளது. இதன் பின் 13–ஆம் நூற்ருண்டில் அருணந்தி சிவாசாரியார் சிவஞான சித்தியாரில் பரபக்கம் எடுத்துக் காட்டியுள்ளார். அதன் பிறகே வடமொழியிற் பரபக்கம் கூறுதல் ஆரம்பிக்கப் பட்டது. அங்ஙனம் அமைந்த வடமொழிநூல் சர்வதர்சன சங்கிரஹம் என்பதாம். பரபக்கம் விரித்த நூலாசிரியர்கள் பரசமயங்களை இழித்துக் கூறவில்லை. அவற்றின் கொள்கைகளை உள்ளது உள்ளபடியே கூறியுள்ளார்கள். இங்ஙனம் கூறப்படும் பரபக்கத்தில் பௌத்த மதமும் பேசப்படுகிறது. பௌத்த மதம் நான்கு பிரிவு கொண்டது. அவை 1. சௌத்திராந்திகர், 2. மாத்தியமிகர், 3. யோகசாரர், 4· வைபாடிகர்.

முதலிற் கூறிய உலோகாயத நெறி அரசியலுக்குறு துணையாய் அதனை வளர்த்தது. அர்த்த சாஸ்திரம் வைத்திய சாஸ்திரம் என்பன அந்நெறியின் துணையினால் தழைத்தன. பௌத்தமதம் தெய்வம், ஆன்மா என்பவற்றை இல்லை என்கிறது. தானம் செய்யப்படவேண்டும். தீயபயப்பதாற் தீயவற்றை விலக்க வேண்டும் என்னும் இவ்வகைக் கொள்கையையுடையது பௌத்தம். உலோகா

யதம் காணப்பட்டவற்றைச் சாஸ்வதமெனக் கொண்டு அவ்வளவினதாய் அமைந்து நிற்கும். பௌத்தம் காணப் படாத நல்வினை தீவினைகள் என்ற அளவுக்கு, உலோகா யதத்தினும் சிறிது மேற்சென்று நிலைக்கும். மணிவாசகப் பெருமான் இவ்வகை நிலைகளைக் குறிப்பிட்டுள்ளார்.

''மிண்டிய மாயா வாத மென்னுஞ்
சண்ட மாருதம்.........
உலோகா யதமென்னும் ஒண்டிறற் பாம்பின்
கலாபே தத்த கடுவிடம்......''

என்பன அப்பகுதிகள்.

சைவ சித்தாந்தம் அநுபவத்தை அடிப்படையாகக் கொண்டது. நினைப்பு, மறப்பு, ஒன்றையே பார்த்தல், கேட்டல் ஆகிய நனவுநிலை, கனவுநிலை, ஆழ்ந்த நித்திரை யாகிய சுழுத்தி என்றிவ்வகை நிலைகளின் மேலும் மனித அநுபவத்தை அமைத்துக் காட்டுவது சைவ சித்தாந்தம். இவற்றின் மேலே உள்ள அநுபவந்தான்பதியினுற்பெறும் இன்பாநுபவம்.

சஞ்சலம், கவலை முதலாம் தடுக்கமுடியாத நிலையினுல் மனிதன பந்தப்படுகிருன். பாரிசவாதப்பிடிப்பினுல் உட லுறுப்பில் அசைவின்மை ஏற்படுவது போலவும்' மனத் திலே எழும் சலனங்களில் இருந்து மீளமுடியாதிருத்தல் போலவும் நீக்கலரிதான ஒரு நிலைமையே பந்தநிலை. அத னையும் நீங்கி, அதன்மேற்பட்ட நிலை ஒன்றினை எய்தப் பெறலாம் என்கிறது சைவ சித்தாந்தம். இந்த மேற்பட்ட நிலையே பேரின்பம், ஆநந்த நிலை எனப்படுகிறது: அதனை யாவரும் அடையலாம்; அதனைப்பெற்று பேறடைந்தவர் பலர். அதனை அடைவதால் இக்கவலை, சஞ்சலம் முதலாம் பந்தநிலையின் மீட்சியைப் பெறலாம் என்று முடிவுகாட்டி நிற்கிறது சைவசித்தாந்தம். இப்பேரின்ப நிலையாம் முடிவு பெரியோர்களால் அநுபவிக்கப்பட்டுள்ளது. அவர் களால் அதியற்புதம் எனப் பேசப்பட்டுள்ளது.

'ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்பமே'

—என மணிவாசகரும்

'போக்கும் வரவு மிரவும் பகலும் புறம்பு முள்ளும்
வாக்கும் வடிவும் முடிவுமில் லாதொன்று வந்துவந்து
தாக்கும் மனேலயந் தானே தருமெனைத் தன்வசத்தே
ஆக்கு மறுமுக வாசொல்லொ ணுதிந்த ஆநந்தமே''

என அருணகிரிநாதரும்

இந்த ஆநந்த நிலையின் அற்புத நீர்மையை அறிவுறுத்துதலைத்தெளிக.

வேதங்களின் சிரஸ்தானமாக அமைவன உபநிஷதங்கள். அவை, பெரியோர்கள், தவசிரேஷ்டர்களின் இன்ப அநுபவங்களேயே எடுத்தியம்புகின்றன. அந்த இன்பம் சைவசித்தாந்தம் காட்டும் இந்த ஆநந்த நிலையே என்க.

இந்த ஆநந்த நிலையை நாம் இவ்வாழ்விலேயே அடையலாம்.பெரியோர்கூற்றுக்கள் இதற்கு ஆதாரமாயுள்ளன.

'தினைத்தனை உள்ளதோர் பூவினில்தேன் உண்ணுதே
நினைத்தொறும் காண்தொறும் பேசுந்தொறும் எப்போதும்
அனைத்தெலும் புண்ணெக ஆனந்தத் தேன்சொரியும்
குனிப்புடை யானுக்கே சென்றுதாய் கோத்தும்பீ''

''காயத்துள் அமு துறவூறநீகண்டு கொள்ளென்று காட்டிய
சேய மாமலர்ச் சேவடிக்கணம் சென்னி மன்னித்திகழுமே'

என மணிவாசகர் கூறுங் கூற்றுக்களை உணர்க.

அறிவு பெறுதற்கு உதவியாக உள்ள பிரமாணங்கள் பிரத்தியட்சம், அநுமானம், ஆகமம் எனமூன்றும். இவை அளவைகள் எனவுங் கூறப்படும். இவ்வளவைகளுள் முதலிரு அளவைகளேயே சிலமதங்கள் கொள்ளும். சைவம் முதலாகிய ஆஸ்திகசமயங்கள் மூன்ருவது அளவையா

கிய ஆகமங்களையும் கொள்கின்றன. ஆகமம் என்பது ஆப்த வாக்கியம்—பெரியோர் வாக்கு எனப்பொருள்படும். பௌத்தம் ஆகமப்பிரமாணத்தைக் கொள்வதில்லை. யாம் முன்னர்க்கூறிய பேரின்ப ஆநந்தநிலை உபநிஷத்துக்களிற் பேசப்படுகின்றது. அதனால் நாம் அந்நிலையொன்றுளதென ஏற்றுக்கொள்கிறோம். இதை ஏற்றுக்கொள்பவரே சைவர் எனற்குரியர், இந்நிலையை இங்கேயே இப்பொழுதிலேயே பெறலாம். துரும்புகொண்டு கடல் கடப்பது என தாயுமானசுவாமிகள் குறிப்பிடல்போல் அற்ப அறிவினாற் பேரின்பம் உள்ளதென்பதை அறிதல் சாலாது.

இத்தகைய நிலைகள் பற்றிக் கேட்க உரியோர்—தகுதியுடையோர் யாவர் என்பதையும் நாம் அறிதல் வேண்டும். மக்கள் மூவகையினர்.

1. சாமுசித்தர் இவர்கள் முற்பிறவித்தொடர்புள்ளவர். இவர் தாமாகவே எதையும் உணரவல்லார். இவர்க்கு உணர்த்த வேண்டிய தேவையிலது.

2. பிராகிருதர்: இவர்கள் உலோகாயதர். உலகம் சதமானது; உடம்பு சதமானது எனக்கொண்டு வாழ்வோர். இவர்க்கு அந்தப் பேரின்ப நிலையை உணர்த்தல் இயலாது.

3. வைநயிகர்: இவர்கள் விநயம் உள்ளோர். தெய்வம், நன்மை இவற்றை உணர்வோர்; இவற்றின் தன்மைகளை ஆராய முனைவோர். இவர்களுக்குத்தான் சைவசித்தாந்தத்தை உணர்த்தலாம். இவர்களே கேட்டற்குரிய தக்கோர்.

பேரின்ப நிலையுணர்ந்து ஆராமையினால் பெரியோர்கள் பாடியுள்ள பாடல்கள் பலப்பல. தாயுமானசுவாமிகள் 'சேரவாருஞ் செகத்தீரே' என அழைப்பதும் இவ்வின்ப நிலையினை யாரும் பெறல் வேண்டுமென்ற ஆராமையினாலேயே.

"தேனென்று பாலென் றுவமிக் கொணுமொழித்தெய்வவள்ளி
கோனன் றெனக்குப தேசித்த தொன்றுண்டு கூறவற்ருே
வானன்று காலன்று தியன்று நீரன்று மண்ணுமன்று
தானன்று நானன் றசரீரி யன்று சரீரியன்றே"

"ஆங்கா ரமுமடங் காரொடுங் கார்பர மாநந்தத்தே
தேங்கார் நினைப்பு மறப்புமருர் தினைப் போதளவும்
ஓங்காரத் துள்ளொளிக் குள்ளே முருக னுருவங்கண்டு
துங்கார் தொழும்புசெய் யாரென்செய் வார்யம தூதருக்கே"

—என அருணகிரிநாதரும்

"கயன்மாண்டகண்ணிதன் பங்கன் எனைக்கலந்தாண்டலுமே
அயல்மாண் டருவினைச் சுற்றமும் மாண் டவனியின்மேல்
மயல்மாண்டு மற்றுள்ள வாசகம் மாண்டென்னுடைய
செயல்மாண்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ"

—என மணிவாசகப் பெருமானும்

இந்தப் பேரின்ப ஆநந்த நிலையில் தம்மனுபவங்களைக் கூறுகின்றமை காண்க.

பெரியோர் நூல்களும் வாக்குகளும் நிறையக் கிடைக்கும் வாய்ப்பு தமிழர்க்கொரு வரப்பிரசாதமாம். இவை எமக்கோர் அருந்தனம். வடமொழியில் உள்ள நூல்கள் எம்மால் விளங்கிப் படித்தற்கரியன. அவைகூறும் நன்னெறிகளே எமது செந்தமிழில் தோத்திரப் பாடலாக நிறைந்து கிடக்கின்றன. ஆதலினல் சைவசமயிகள் சாத்திரம் பயில எண்ணுமுன் தோத்திரம் பயிறல் நலந்தருவதாம். தோத்திரத்தில் ஈடுபடுவதாற் பக்குவம் வரும். நல்லுணர்ச்சியை அப்பயில்வு தரும்.

வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்தென்
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே

எனக்கூறும் இராமலிங்க அடிகளாரின் அநுபவம், தோத்திரங்களிற் பயில்வதனுலாம் நலனுக்கு நற்சான்று.

வடமொழி வேதங்கள் ரிஷிகளின் அநுபவம். சுவே தாஸ்வர உபநிடதம் 'கண்டேன்' எனக் கடவுளியல்பைக் கூறித்துதிக்கிறது. எங்கள் அப்பர் பெருமானும் தேடிக் கண்டுகொண்டேன்.........எனவே கூறுகின்றார். ஆதலினால் தோத்திரங்களினால் சைவத் தெளிவும், தெய்வத் தெளிவும் இனிதின் எய்தப் பெறலாம்.

'ஆகமமாகி நின்றண்ணிப்பான்' என மணிவாசகர் கூறும் கூற்று 'பேரின்பநிலையின் இனிமையை உணர்த்து கிறது. 'அண்ணித்தல்' என்பதற்கு அணுகி நிற்றல் எனவும் பொருள் கொள்ளலாம். ஆகவே அவ்வின்பநிலை மிகவும் சமீபத்தில் இருக்கின்றதென நாம் உணரலாம்; ஆலயத்து நிகழ்த்தும் கிரியைகள், சடங்குகள் எல்லாம் அப்பேரின்ப நிலையை அடையத்தான் கற்பிக்கப்பட்டவை

"மூர்த்தி தலம் தீர்த்தம்................................
வார்த்தை..............சற்குருவும் வாய்க்கும் பராபரமே"
எனத் தாயுமானவர் உரைத்திருத்தல் காண்க.

உயிர்களுக்கு மூவகை நிலைகளை அமைத்துக் காட்டு கிறது சைவசித்தாந்தம்.

முதலாவது நிலை சகலம் எனப்படும். இது கருவிகர ணங்களோடுள்ள நிலை.

இரண்டாவது நிலை கேவலம் எனப்படும். இது கருவி கரணங்கள் செயற்படாத நிலை.

மூன்றாவது நிலை சுத்தம் எனப்படும். இது கடவுளை அடையும் நிலை.

இவ்வாறு மூவகை நிலைகளை வகுத்துக் கூறியிருப்பது சைவசித்தாந்தத்திற்குப் பெருமை தருகிறது. மாண்டுக்கிய உபநிடதமும் இவற்றைக் கூறுகிறது, அங்குக் குறிப்பிடப் படும் துரியம் என்னும் நிலையே இங்கு நாம் எடுத்துக் கூறிய சுத்த நிலை என்க.

சைவசித்தாந்தம் மிகத் தெளிவாக இந்நிலைகளை விளக்குகிறது. உபநிடதங்களின் தெளிவே சைவசித்தாந்த மாம். "வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தம்" என உமாபதி சிவாச்சாரியார் உரைத்திருத்தல் காண்க.

முப்பது ஆண்டுகளுக்கு முன்!

[சைவ சித்தாந்த மகா சமாஜம் தோன்றி, 7—7—1965 அன்று 60 ஆண்டுகள் நிரம்பின. இவ்வாண்டு டிசம்பர் மாதத்தில் மணி விழா மிகச் சிறப்பாக நடக்க யிருக்கின்றது. இதுபோழ்து சமாஜத்தின் பழைய சரித்திரத்தை நினைவுபடுத்திக் கொள்வது இன்பத்தையும் பயனையும் அளிக்கும். 30 ஆண்டுகளுத்கு முன் 'சித்தாந்தம்' இதழில் வெளிவந்த செய்திகளிலிருந்தும், கட்டுரைகளிலிருந்தும் சிற்சில பாகங்கள் எடுத்து வெளியிடப்பெறும்.] —செயலாளர்,

---

1928ஞு பிப்ரவரிமீ சித்தாந்தம் இதழில் வெளிவந்தது

சைவ சித்தாந்த மஹா சமாஜத்தின் இருபத்திரண்டாவது கூட்டம்

[பத்திராசிரியர்]

பிரபவ ஆண்டு மார்கழித் திங்கள் கரு, கசு, கஎ-ஆம் (1927ஞு டிசம்பர் 30, 31, 1928 ஆம் ஞு ஜனவரி 1) நாட்களாகிய வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் புதுவை மாநகரின்கண் திருவாளர்-சீகாழி கிருஷ்ணசாமி செட்டியார் அவர்கள் மாளிகையில் சமாஜக் கூட்டம் நடைபெற்றது.

* * *

முதனாள் கூட்டம் காலை எ மணிக்குத் தொடங்கத் தமிழ்மறை யோதிக் கடவுள் வணக்கஞ் செய்து முடிந்த

பின்னர்த் திருவாளர் ம. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள் எடுத்துமொழிய, திருவாளர் நல்லசிவன்பிள்ளையவர்கள் அடுத்து மொழிய, திருவாளர் மணி, திருநாவுக்கரசு முதலியார் தொடுத்து மொழிய ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் தலைமை வகித்தார்கள். பிறகு பண்டித ரத்நம் புழலை திருநாவுக்கரசு முதலியார் அவர்கள் இயற்றிய வரவேற்புக் கவியைத் திருவாளர் மணி. திருநாவுக்கரசு முதலியார் அவர்கள் வாசித்தனர். அடுத்துத் தலைவர் அவர்கள் அருமை மிக்க முன்னுரை அமுதம் வழங்கினர். அதன் பிறகு திருவாளர்— ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் B. A., L. T, சைவத்தின் எதிர்கால நிலை என்பதைப்பற்றி ஒரு சொற்பொழிவு அழகுமிக நிகழ்த்தினார்கள்; பின்னர்த் திருவாளர் மா, ரா. குமாரசாமிப் பிள்ளையவர்கள் தற்காலமும் நம் வேலையும், என்பதைப் பற்றி விநோதரசம் ததும்பவும், வித்துவான் திருவாளர் அ. வரத நஞ்சைய பிள்ளையவர்கள் சர்வமத சம்மதம் என்பதைப் பற்றிச் சைவ நலமும் சித்தாந்தமும் மணக்கவும், திருவாளர் தமிழ்ப் புலவர் சிவமுத்துக் குமாரசுவாமி முதலியார் அவர்கள் சமயம் என்பதைப் பற்றிச் சுவை துளும்பவும் விரிவுரைகள் யாவரும் இனிக்குமாறு செய்தார்கள்.

மாலை 2 மணிக்குக் கூட்டம் தொடங்கு முன்னர்த் தமிழ்மறை யாவர் கருத்தையும் கவரும் வண்ணம், இன்னிசையுடன் இனிது ஓதப்பட்டது. அடுத்துத் தலைவர் அவர்கள் தமது முன்னுரையாகச் சைவ சித்தாந்த விளக்கம் என்ற பொருள் பற்றி மிக நயமாகவும் தெளிவாகவும் பசுமரத்தாணி அறைந்தாற்போல் எடுத்தோதினர். அதன் பிறகு தமிழ்ப் புலவர் திருவாளர். கி. குப்புசாமி முதலியார் அவர்கள் கறைக்கண்டனுக்கு மூத்தவள் என்பதைப் பற்றித் தமது கல்வியாற்றல் தோன்றவும், திருவாளர் மணி—கோடீசுவர முதலியார் அவர்கள் B. A., L. T. சைவ ஒழுக்கம் என்பதைப்பற்றிப் புது கருத்துக்களின் நயத்துடனும், மிகஇனிமையான உபந்யாசங்கள் செய்தனர். பின் திருப்புகழ் மணி, திரு. T. M; கிருஷ்ணசாமி ஐயர் அவர்களும் ஏனை மயிலைத் திருப்புகழடியார்களும் திருப்புகழ்ப்

பாராயணமும் மிக உருக்கத்துடனும் அன்பர் பரவச முற வும் நடத்தினர்கள். தலைவர் அழகிய சுருக்க விளக்க முடிவுரை கூற முதனுள் கூட்டம் கலைந்தது.

*　　　　*　　　　*

இந்நிகழ்ச்சிகளுடன் இருபத்திரண்டாம் ஆட்டைக் கூட்டம் எம் முழுமுதற் செழும் பொருளாகிய சிவபெருமான் திருவருளால் இனிது நடைபெற்றது. திருவாளர் T. V. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள் இடையே பலர் வேண்டுகோட்கு இணங்கி ஆர்வமும் அன்பும், பொங்கி வழியச் சமயச் சீர்த்திருத்தம் என்பது பற்றிச் செய்த உபந்நியாசம் கேட்டவர் செவியிலே என்றும் மாருதிருக்கு மென்பது திண்ணம். சைவ சமயத்தை ஓம்பாது நம்ம ஞேர் உறங்கிக் கிடத்தலும் அதனுல் நமக்கு ஏற்படும்இன் னல்களும் கிறித்துவச் சமயத்தார் தம் சமயத்தை வளர்க் கச் செய்து வரும் அற்புத விஷயங்களும் பிள்ளை அவர்க ளால் எடுத்துக் காட்டப்பட்டன. பிள்ளை அவர்க ளும் இவ்வாண்டிலே யிருந்து சமாஜத் துணைத் தலைவ ராகவும் இருக்க ஒப்புக்கொண்டுள்ளார்கள். இவ்வாண்டு நிகழ்ச்சிகள் யாவும் எமக்கு நமது சமாஜம் மீண்டும் புத் துயிர் பெற்றது என்பதையும் பண்டை உயர்நிலையை இனி அடையும் என்பதையும்காட்டுதற்கு நன்னிமித்தங்களாகத் தோன்றுகின்றன. வரும் ஆண்டிலேயே கோயமுத்தூரின் கண் பிரபல வர்த்தகரும், சைவப் பிரபு சிகாமணியும், யாவர்க்கும் இனியாரும் எளியரும் எடுத்த கருமத்தைத் தொடர்ந்து முடிக்கும் ஆற்றலும் வாய்ந்த திருவாளர் இரத்தினசபாபதி கவுண்டர் அவர்கள் நன்முயற்சியால் சீரும் சிறப்பும்பெற்று நமது சமாஜம் சைவ சமயத்தின் சமரச வியாபகத் தத்துவ ஒளியை உலக மெங்கும் பரப்பு மென எல்லாம் வல்ல எம்பெருமான் திருவருளைமுன்னிட்டு நம்புகின்ருேம்.

— ✩ —

மதிப்புரை

திருத்தொண்டர் சரித்திரம்

[பெரியபுராண சாரவெண்பா]

வல்லிப. தெய்வநாயக முதலியார். இரண்டாம்பதிப்பு *1965*. பதிப்பாசிரியர். ரா. பஞ்சநதம் பிள்ளை, வரலாற்றுச் செல்வர், மலைக்கோட்டை, திருச்சி. பக்கம் 18)

சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆரூர் மன்னரை வணங்கி, "அடியார் தொண்டையும் அவர்கள் பெருமையையும் எவ்வாறு பாடுகேன்? பாடும் பரிசு எனக்கு நீ அருள்" என்று வேண்ட பெருமான் அவ்வாறே "மறையளித்த திருவாக்கால் தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்' என்று அடியெடுத்துக் கொடுக்க, அதன்படியே திருத்தொண்டத்தொகைப் பதிகம் அருள் செய்தார். இதனுள் தனியடியார் அறுபத்து மூன்று பேரையும்தொகையடியார் ஒன்பதின்மரையும் பதினொரு பாசுரங்களில் இவ் அடியார்க்கும் அடியேன். ஆரூரன் ஆரூரில் அம்மானுக்காளே' என்று பாடி முடித்தார்.

பின்னர், நம்பியாண்டார் நம்பி இத்திருத்தொண்டருடைய புகழையும் சரித்திரத்தையும் சிறிது விளக்கி, எண்பத்தொன்பது பாடல்களில் திருத்தொண்டர் திரு அந்தாதி என்ற சிறு நூலாகப் பாடினார். இங்கு இவர் திருத்தொண்டத் தொகையில் கூறப்பட்டுள்ள தொண்டர் வரிசைப்படி, ஒரு தொண்டருக்கு ஒருபாடல் வீதம் முறையாக அமைத்து, ஒரு பாசுரம் முடிந்த இடத்தில் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு ஒரு பாடலில் வணக்கம் சொல்லி அந்தாதியை முடித்திருக்கிறார். இதனுள் அப்பர், சம்பந்தர், சேரமான். கோச்செங்கட் சோழர் ஆகியோருக்கு மட்டும் இரண்டு பாடல்கள் வீதம் பாடினார்.

இதன் பின்னர், சேக்கிழார் பெருமான் *4286* பாடல்கள் கொண்ட திருத்தொண்டர் புராணமென்னும் பெரிய புராணமாக இதை விரித்துப் பாடினார். தொகை அந்தாதி புராணம் என்ற மூன்றும், தோகைவகைவிரி என்று ஆன்

ளுேர் சொல்வர். பெரிய புராணம் ஏற்பட்டபிறகு. நூல்களில் இறைவழிபாடு கூறும்போது இறைவன் முதலியோரை வழிபட்டு, பின் சமயாசாரியர் நால்வருக்கும் திருத்தொண்டர்களுக்கும் வணக்கம் கூறுவது ஒரு மரபாக ஆகி இருக்கிறது. இவற்றின் பின்னர், சென்ற ஆயிரம் ஆண்டுகளில் பலவகையான நூல்களில் திருத்தொண்டர் சரித்திரத்தைக் குறிப்பிட்டுப் பாடி வந்திருக்கிருர்கள்.

குமார பாரதி என்பவர் திருத்தொண்டர் வெண்பா அல்லது திருத்தொண்டர் மாலை என்ற பெயரில் பாயிரத்தோடு 102 வெண்பாகொண்ட ஒரு நூல் பாடியிருக்கிருர். இதனுள் இவர் கைக்கொண்ட முறை திருத்தொண்டர் அந்தாதி முறை. நம்பியாண்டார் நம்பி அந்தாதி முறையிலேயே தாம் 'இவ்வள்ளுவ நூல் வெண்பா' பாடுவதாகக் கூறுகிருர். குறள் விளக்க வெண்பாப் பாடிஞேர் அனைவரும் திருக்குறள் அதிகார முறையைப் பின்பற்றிப் பாடியிருக்க, இவர் மட்டும் தொண்டர் அந்தாதியில் கூறிய நாயன்மார முறையையே பின்பற்றிப் பாடியிருக்கிருர். இதன் பாடல் ஒவ்வொன்றும் தொண்டர் வரலாற்றைக் குறிப்பிட்டு அதற்கு விளக்கமாகப் பொருத்தமான திருக்குறள் பாட்டை எடுத்து அமைத்துள்ளது. இதன் காலம் 18-ஆம் நூற்ருண்டு.

திருவாரூர் வைத்தியநாத தேசிகரின் புதல்வராகிய தியாகராஜ தேசிகர் அன்பர் போற்றிக் கலிவெண்பா என்ற ஒரு பாடல் 186 கண்ணிகளால் செய்திருக்கிருர். ஒவ்வொரு தொண்டருடைய சரித்திரமும் இங்கு போற்றி என்று முடிகிறது. அப்பர் சம்பந்தர் போன்ற சரித்திரங்களை மிகப் பலவான கண்ணிகளால் கூறுகின்ருர். ஏனையோர் சரித்திரங்களை இரண்டு கண்ணிகளால் கூறுகின்ருர். இந்நூலின் காலம் 18-ஆம் நூற்ருண்டின் இறுதி.

சிதம்பரத்தையடுத்த பாளையங்கோட்டை. தாண்டவராய முனிவர் என்பவர் திருத் தொண்டர் அந்தாதி என்றே பெயர் அமைந்த ஒரு நூல் செய்தார். அது முறையாகத் தொண்டர்கள் சரித்திரச் சுருக்கத்தை 100 வெண்பாக்களால் கூறுகிறது. அப்பர் சம்பந்தர் சுந்தரமூர்த்தி ஆகி

யோருக்குமட்டும் முறையே 9, 10, 7 பாடல்கள் உள்ளன. இவைகளின் பின் நம்பியாண்டார் நம்பிக்கு ஒரு பாடலும் அருண்மொழித் தேவர் என்னும் சேக்கிழாருக்கு ஒரு பாடலும், மாணிக்கவாசகருக்கு மூன்று பாடல்களும் உள்ளன. பாடல்கள் நல்ல நடையில் உள்ளன. இந்நூல் அச்சாக வில்லை. இதன் காலம் சென்ற நூற்ருண்டின் இறுதி. இவரே திருத்தொண்டர் போற்றிக் கலிவெண்பா என ஒரு நூலும் செய்திருக்கிருர்.

இந்நூற்ருண்டின் தொடக்கத்தில் திரிசிராப்பள்ளி யில் சைவசித்தாந்த அறிஞராய் விளங்கிய சாம்பசிவம் பிள்ளையின் தந்தையார் மாசிலாமணிப் பிள்ளை என்பவர் திருத்தொண்டரைப்போற்றி இரண்டு நூல்கள் பாடியிருக்கிருர். தீக்ஷை இல்லாதோரும் கற்றுத் தொண்டர் களின் பக்திப் பெருக்கை உணரவேண்டும் என்பதற்காக நூல் செய்தேன் என்று இவர் கூறுகிருர். இவ்விரண்டி னுள் திருத்தொண்டர் போற்றிக் கலிவெண்பா என்பது 80 கண்ணிகள் உடையது. தொண்டர் வரலாறு ஒவ்வொன் றும் போற்றி என்று முடிவது. மற்ற நூல் திருத்தொண்டர் அகவல் என்பது ஆசிரியப்பாவில் 156 அடிகள் உடையது. தொண்டரை இரண்டுவரிகளில் போற்றுகிருர். பின்வரும் வரிகள் எடுத்துக் காட்டாகும்.

தில்லைவாழ் அந்தணர் சிரடி பணிய
எல்லையில் போகம் இன்பவி டெளிதே
திருநில கண்டர்தஞ் சேவடி பரவக்
கருநீ லக்குகைக் கட்டறுந் தானே

இந்நூல்கள் நல்ல நடையில் உள்ளன, காலம் 1896.

இந்த நூற்ருண்டில் அநேகர் திருத்தொண்டர்களை யும் வைணவ, வேதாந்த, ஏனைய மதத் தொண்டர்களையும் போற்றிப் பாடல் பாடியிருக்கிருர். சச்சிதானந்த முதலி யார் பாடிய அருளாளர் தொகை மாலை என்பது, திருத் தொண்டத்தொகை போலவே ''அடியேன்.........சென்னை வடிவேலர்க்காளே'' என்று முடிகின்ற 10 பாடல் உடை யது. (1931) சேய்த்தொண்டர்த் தொகை என்பது, சேயாகிய முருகன் தொண்டரை வரிசைப்படுத்திக் கூறுவது. இது வ. சு. செங்கல்வராயப் பிள்ளையவர்கள் தூண்டுதலால்,

தேனூர் வரகவி சொக்கலிங்கனுர் பாடிய 12 பாடல்கள் உடையது (1960) இவரே சேய்த்தொண்டர் திரு அந்தாதி, போற்றிக் கலிவெண்பா முதலியனவும் பாடியிருக்கிருர்.

பெரிய புராணச் சரித்திரமானது, சென்ற நூற்ருண்டின் இறுதியில் தமிழ்நாட்டில் மிக்க புகழோடு விளங்கிய இசைவாணராகிய மகா வைத்தியநாதையர் அவர்களுடைய தமையனுர் இராமசுவாமி சிவனுரால் மிக்க விரிவானகீர்த்தன நூலாகப் பாடப் பெற்றுள்ளது. சில ஆண்டுகளுக்குமுன் பெரிய புராணத் தொண்டர் வரலாற்றை திருத்தொண்டர் கிதம் என்ற நூலாகக் கே. எம். பாலசுப்பிரமணியம் பாடியிருக்கிருர்.

இந்த வரிசையில் குறிப்பிடத் தக்க ஒரு சிறப்பான நூல் பெரியபுராணசார வெண்பா என்பது. இது வல்லி ப. தெய்வநாயக முதலியாரால் இயற்றப்பட்டு 1893-இல் அச்சாயிற்று. இது திருத்தொண்டர் வரலாற்றைக் கூறுவது. காப்பு முதலியவற்ருேடு 87 பாடல்கள் உடையது. இந்நூலைத் திரிசிராப்பள்ளி பஞ்சநதம் பிள்ளையவர்கள் திருக்குறள் வேள் கு. வரதராச பிள்ளையவர்கள் ஆதரவோடு மறு பதிப்பாக வெளியிட்டிருக்கிருர். இத்தகைய தொண்டர் துதி நூல்களை அச்சிட்டுப் பாதுகாக்கும் சிவ புண்ணியம் பெரிதும் பாராட்டுதற்குரியது.

—(ஆசிரியர்)

சமாஜத் தேர்வுகளின் பாடத் திட்டம்
இளஞ் சைவப் புலவர்

1. இலக்கணம்: நன்னூல் கண்டிகை (ஆறுமுக நாவலர்) யாப்பருங் கலக்காரிகை, தண்டியலங்காரம் (பொதுவியல், பொருளணியியல் மட்டும்.)

2. இலக்கியம்: திருமுருகாற்றுப்படை, கந்தர் கலிவெண்பா, கந்தர் அனுபூதி, திருக்குறள் அறத்துப்பால் (பரிமேலழகர் உரையுடன்) சுந்தரர் தேவாரம் முழுவதும்.

3. சாத்திரம்: திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், உண்மை விளக்கம், திருவருட் பயன், கொடிக்கவி, வினவெண்பா,

4. **உரை நடை:** சைவத்தின் சமரசம் (திரு. வி. க.) வாகீசர் அல்லது மெய்யுணர்வு (சிவக்கவிமணி) பட்டினத்தார் வரலாறும் நூலாராய்ச்சியும், தாயுமானவர் வரலாறும் நூலாராய்ச்சியும் (கா. சு. பிள்ளை M. A., M. L.) பெரிய புராண வசனம், திருவிளையாடற் புராண வசனம் (ஆறுமுக நாவலர்)

சைவப் புலவர்

1. **இலக்கணம்:** தொல்காப்பியம் எழுத்ததிகாரம் (நச்சினார்க்கினியம்) சொல்லதிகாரம் (சேனாவரையம்) பொருளதிகாரம் (இளம்பூரணம்) தருக்கசங்கிரகம் (சிவ ஞான முனிவர்)

2. **இலக்கியம்** பெரிய புராணம் (திருநாவுக்கரசர் புராணம் முழுவதும்), சம்பந்தர் தேவாரம் முழுவதும், திருவாசகம் முழுவதும், ஒன்பதாந் திருமுறை முழுவதும்.

3. **சாத்திரம்:** சிவஞானபோதச் சிற்றுரை, சிவ ஞான சித்தியார் சுபக்கம் (சிவஞான முனிவர் உரை) சிவப் பிரகாசம், சங்கற்ப நிராகரணம்.

4. **உரை நடை:** சைவ சித்தாந்த ஞானபோதம் (மறைமலையடிகள்) சிவஞான சித்தியார் ஆராய்ச்சி, (ந. சிவ குருநாத பிள்ளை) திருக்குறளின் உட்கிடை சைவ சித்தாந்தமே (க. வச்சிரவேல் முதலியார்) சிவஞான முனிவர் உரை நடை நூல்கள், பெரிய புராண சூசனம் (ஆறுமுக நாவலர்)

சமாஜத் தேர்வு எழுதுவோர் கவனிக்க:

தேர்வு எழுத விரும்புவோர் பாட திட்டத்திற் குறித்துள்ள நூல்களை நன்கினிது படித்துப் பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும். முதல்வகுப்பில் தேர்ச்சிபெறும் இளைஞர்க்கு அதற்கென அன்பரொருவர் வழங்கிய மூலப்பொருளினின்று வரும் வருவாயைக்கொண்டு பரிசு வழங்கப்பெறும். இளஞ் சைவப் புலவர் தேர்வுக்கு ரூபாய் மூன்றும், சைவப் புலவர் தேர்வுக்கு ரூபாய் நான்கும் பதிவுக் கட்டணம் ஆகும். விண்ணப்பம் அனுப்பும் இறுதிநாள் 30—9—65. தேர்வு நவம்பர் மாதம் மூன்றும் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும்.

திரிசிரபுரச் சைவசித்தாந்த சபையில் 24—6—65-ல் திருஞானசம்பந்தர் திருநாளும் 3—7—65-ல் மாணிக்க வாசகர் திருநாளும் கொண்டாடப்பட்டன.

புலவர் திரு. அரசப்பனார் "திருஞானசம்பந்தர்" என்பது பற்றியும், சமயபுரம் திரு. ந. இரா. ஊரன் அவர்கள் "வாதவூரடிகளும் வடலூரடிகளும்" என்பது பற்றியும் முறையே பேசினர்.

திருச்சி சைவசித்தாந்த சபைக் கட்டிடத்தில் 16-7-65 முதல் 16-8-65 முடிய சித்தாந்தப் புலவர் மாமணி பாலகவி வயிநாகரம் வே. இராமநாதன் செட்டியார் அவர்கள் உண்மை விளக்கம்; திருவருட்பயன், போற்றிப்ப ஃறொடை ஆகிய நூல்களை ஒட்டிய சாத்திர வகுப்பு நடத்தி வருவது தெரிந்து மகிழ்கிறோம். அன்பர்கள் அவ்வகுப்பைப் பயன் படுத்திக் கொள்ள வேண்டுகிறோம்.

காரை சைவசித்தாந்த வித்தியாச்சிரமத்தின் 32-வது ஆண்டு நிறைவு விழா 17, 18—7—65 சனி ஞாயிற்றுக் கிழமைகளில் மேலையூர் சிவராஜயோக மடாதிபதி மறைத் திரு மாணிக்க வாசக ஞானதேசிகசுவாமிகள் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. பல அன்பர்கள் சமயச் சொற்பெருக் காற்றினர்.

புரசைத் திருநெறிக் கழகத்தின் 53-ஆம் திங்கள் வழி பாடு சிந்தாதிரிப்பேட்டை. ஆதிபுரீசுவரர் ஆலயத்தில் 18—7—65 அன்று மிகச் சிறப்புற நிகழ்ந்தது.

திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ. காசிவாசி அருள் நந்தித்தம்பிரான் அவர்கள் அருளாணையின் படி 27—7—65 முதல் 4—8—65 முடிய மதுரையில் பெரியபுராணச் சொற்பொழிவுகள் திருக் கல்யாண மண்டபத்தில் சிறப்புற நிகழ்ந்தன. சிதம்பரத்தில் 4—8—65 அன்று திருமுறை விழா நிகழ்ந்தது.

மயிலை நூலாராய்ச்சிக் குழுவின் சார்பில் ஸ்ரீகபாலீஸ்வர தேவஸ்தான புதிய தேவார பாடசாலைக் கட்டிடத்தில் திரு. நல். முருகேச முதலியார் அவர்கள் சிவஞானசித்தியார் வகுப்பு வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை காலையில் நடத்தி வருகிறார்கள்.

ஸ்ரீ சேக்கிழார்சுவாமிகள் குருபூசை

6—6—'65 ஞாயிற்றுக்கிழமை பகல் 10-மணிமுதல் 6-மணிவரை சேக்கிழார் சுவாமிகள் குருபூசை நாகர்கோயில் நன்னெறி மன்றத்தின் சார்பில், கணபதிபுரம், கணபதி நாடார் அவர்களது இயற்கை எழில் நிறைந்த தோப்பில் அமைக்கப்பட்ட விசேஷப் பந்தலில், கணபதிபுரம் அன்பர்களது பொருளுதவியாலும் நன்முயற்சியாலும் மிகச் சிறப்பாக நடந்தேறியது. விழாவிற்கு நன்னெறி மன்றத் தலைவர் உயர்திரு. சி. வள்ளிநாயகம்பிள்ளை B.A.,B.L. அவர்கள் தலைமை தாங்கினார்கள். காலை 10-மணிக்கு அருச்சனை தீபாராதனையுடன் விழா ஆரம்பமாயிற்று. திருமுறை ஓதல், திருத்தொண்டத் தொகை பாராயணம், தியானம், பஜனை ஆகியவை 10 முதல் 1 வரை நடந்தது. தீபாராதனைக்குப் பின் மகேசுர பூசை நடந்தது. 2-30 மணிக்கு மீண்டும் கூட்டம் ஆரம்பமாயிற்று. பஜனைக்குப் பின் நன்மொழி வழங்கல் நடந்தது. வித்துவான், சைவப் புலவர் சி. குமரேச பிள்ளை அவர்கள் 'சேக்கிழாரும் பெரிய புராணமும்' எனும் தலைப்பில் அரியதொரு விரிவுரை ஆற்றினார்கள். ஆசிரியர் உ. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் 'வழிபாட்டுக் கூட்டத்தின் மகிமை' எனும் பொருள் பற்றிச் சொற்பெருக்காற்றினர். முன்னாள் நகராட்சி மன்ற ஆணையாளர் உயர்திரு. சிவகுருநாதன் செட்டியார் அவர்கள் அடியார்களின் அற்புதங்களை விளக்கிக் காட்டி வாழ்த்துரையும் வழங்கினர். சேக்கிழார் பிள்ளைத் தமிழ் பாராயணம், மௌனம், வாழ்த்து இவை முறையே நிகழ்த்தி மாலை 6-மணிக்குத் தீபாராதனையுடன் விழா இனிது முடிவுற்றது. அனைவர்க்கும் அருட்பிரசாதம் வழங்கப்பட்டது.

பழனி தமிழ் இலக்கிய மன்றத்தின் சார்பில் பெரிய புராண விரிவுரை நிறைவு விழா 25—7—65 மாலை நிகழ்ந்தது. பழனி திரு. ஆறுமுக சுப்பிரமணியசாமி அவர்கள் விரிவுரையாற்றி நிறைவு செய்தார்கள். வித்துவான் சரவண ஆறுமுக முதலியார் M.A.,B O.L.,L.T., அவர்கள் தலைமையில் பலர் விரிவுரையாற்றினர்.

Printed at the Sengunthamithran Press, 33, Armenian St., Madras-1. by V. Sambandan, Edited by M. Arunachalam, M. A., and Published by S. Satchidanandam Pillai, B. A., L. T., for the Saiva Siddhantha Maha Samajam, 12, East Mada St., Mylapore, Madras-4.